இன்று (25.08.2021) சென்னை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் முனைவர்.ஜெ.விஜயா ராணி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், 2021-2022-ஆம் ஆண்டிற்கான கடன் வழங்கும் திட்டத்திற்கான கையேட்டை சென்னை மாவட்ட ஆட்சியர் வெளியிட்டார். இந்தக் கையேடுகளை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு.தேவேந்திர குமார் மற்றும் நபார்டு வங்கி மேலாளர் திருமதி.கிருத்திகா, முன்னோடி வங்கி மேலாளர் திரு.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.